மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது களப்பால் பகுதியில் நரிமணம் என்ற இடத்தில் எண்ணெய் எடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். அதிகமாக எண்ணெய் எடுத்ததற்குப் பிறகு பங்கு கேட்பது பற்றி யோசிக்கலாம்.

திரு. சா. ஞானசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, தஞ்சை மாவட்டத்தில் களப்பான் பகுதியில் 3 எண்ணெய் கிணறுகள் தோண்டப்படுவதாகத் தகவல் தந்திருக் கின்றார்கள். இரண்டாவதாக தோண்டப்பட்ட கிணற்றில் நல்ல எண்ணெய் வளம் இருப்பதாக அதிகாரிகள் கண்டுபிடித்தும், சுற்றியுள்ள வேறு மாநில அதிகாரிகள் அது பொய்த்துவிட்டது எனக்கூறி இருக்கின்றார்கள். மீண்டும் அந்தஎண்ணெய்கிணற்றைப் பற்றி ஆய்வு செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அப்படிப்பட்ட தகவல் ஒன்றும் அரசுக்கு இல்லை. தற்போது மூன்றாவது கிணறு தோண்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

வேதாரண்யம் பகுதியில் உப்புத் தொழிற்சாலை.

169 (*வினா எண் 8352) திரு. மு. இராசாங்கம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யம் பகுதியில் கடல் நீரிலிருந்து எடுக்கப்படும் உப்பிலிருந்து ''Table salt'' தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் இல்லை.

தாம்பரத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலை

170—(*வினா எண் 9228) திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ இல்லை. (ஆ) இவ்வினா எழவில்லை.

1986 நவம்பர் 25]

(முற்பகல் 9.20)

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டிலாவது இந்தப் பிரச்சினை பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே செங்கல்பட்டு மாவட்டத்தில் படாளத்திலும், மதுராந்தகத்திலும், திருத்தணிக்கு அருகிலுள்ள திருவாலங்காட்டிலும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. தாம்பரம் பகுதியில் சர்க்கரை உற்பத்தி செய்கின்ற கரும்பு சாகுபடி இல்லை. ஆகவே, தற்போது தாம்பரம் பகுதியில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்கின்ற உத்தேசம் அரசிடம் இல்லை.

திரு. எல்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தம் எத்தனை சர்க்கரை ஆலைகள் இயங்குகின்றன? குறிப்பாக கூட்டுறவுத் துறையில் எந்த வழிக்காட்டிக் கொள்கையின்கீழ் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் அமைக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கூட்டுறவுத் துறையின் கீழ் 11 சர்க்கரை ஆலைகளும், பொதுத் துறையின்கீழ் 3 சர்க்கரை ஆலைகளும், தனியார் துறையின்கீழ் 10 சர்க்கரை ஆலைகளும் இயங்கிக் கொண்டு வருகின்றன. தற்போது தஞ்சை மாவட்டத்திலுள்ள மயிலாடுதுறையில் தலைஞாயிறு என்ற இடத்தில் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்கப்பட்டு வருகிறது.

நகராட்சிப்பள்ளி ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்குதல்.

171—(*வினா எண். 3467) திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் மற்றும் திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக 1-6-1981-ல் ஆக்கப்பட்டது போல் நகராட்சிப் பள்ளியில் பணிபுரிடவர்களுக்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி, நகரியம் மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் அனைவரையும் 1-6-86 முதல் அரசு ஊழியர்களாக ஆக்க அரசு, ஆணை பிறப்பித்துள்ளது. (அரசாணை எண் 702, கல்வி, நாள் 23-5-1986.)